(2) தங்கவேல் மூப்பனார், (3) சுப்பிரமணிய மூப்பனார், (4) பக்கிரி மூப்பனார் என்பவர்கள் தலைமறைவாக இருக்கின்றனர். அவர்களைக் கைது செய்ய காவல் துறையினர் தீவிர நடவடிக்கை மேற் கொண்டுள்ளனர். இவர்கள் கைது செய்யப்பட்டவுடன் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும்.

மேற்கூறியவை தவிர வேறு வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. எனவே அரிசன விவசாயத் தொழிலாளர்கள் பரவலாகத் தாக்கப்படுகின்றனர் என்று கூற இயலாது. எனினும் விவசாயத் தொழிலாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு அளிக்க தமிழக அரசு ஒருபோதும் தயங்காது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், சோழபுரம் சம்பவம் அதிகாலையில் நடந்தது என்றும், 19—9—1973 ஆம் தேதியன்று பிரதமர் அவர்கள் தமிழகத்திற்கு வந்த காரணத்தால் பந்தோபஸ்திற்காக அதிகமான போலீசார் சென்றுவிட்டதாகவும், போலீசாரே மத்தியானத்திற்குமேல்தான் விசாரணை செய்தார்கள் என்றும் கூறப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுபற்றித் தகவல் இல்லை. ஆனால் குற்றவாளிகள் இருதரப்பினர்மீதும் ஏற்ற, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

(ஆ) கீழ்க்குளம் கிராமப் பகுதியில் போதிய நீர் வழங்கப் படாமையும் அதனால் நிலங்கள் தரிசாக்கப்பட்டதும் குறித்து

Thiru N. Dennis: I wish to call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, namely, the inadequate water-supply in Keezhkulam revenue village covered by the Devicode Branch of the Chittar-Pattanamkal Irrigation System resulting in the lands becoming fallow.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, சிற்றார்-பட்டணங்கால் பாசனத் திட்டத்தைச் சேர்ந்த தேவிகோடு கிளைக்கால்வாய், கீழ்க்குளம் கிராமபகுதியில் 563.41 ஏக்கர் நிலப்

1973 டிசம்பர் 4] *[திரு. ப. உ. சண்முகம்]*

பரப்பிற்குப் பாசனமளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில், 343.26 ஏக்கர் மட்டுமே இதுவரை பாசன வசதி அளிக்கப் பட்டுள்ளது. ஆயக்கட்டுப்பகுதியின் இவ்வாறு பாசன அளவு குறைந்துள்ளதற்குக் கீழ்க்கண்டவை காரணங்களாகும்:—

(1) கால்வாயில் திட்டமிட்ட அளவுக்குத் தண்ணீர் அனுப்பப் பட்டாலும் கடற்கரைக்கு வெகு அருகாமையில் அமைந்துள்ள ஆயக்கட்டுப் பகுதியில் உள்ள மண் அதிக அளவில் நீரை ஈர்த்துக் கொள்வதன் காரணமாக கால்வாயில் அனுப்பப்படும் நீர் போதுமானதாக இல்லையெனத் தெரியவந்தது. சாதாரணமாகத் தேவைப்படும் நீரைக்காட்டிலும் இருமடங்கு அல்லது மூன்று மடங்கு நீர் அதிகமாகத் தேவைப்படுகிறது.

(2) அப்பகுதியிலுள்ள உழவர்கள் பெரும்பாலும் அளவில் சிறிய நிலங்களையே வைத்திருக்கின்றனர். இப்பகுதியிலுள்ள நிலங்களின் தன்மை காரணமாக இங்கு புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றுவதில் காணப்படும் முன்னேற்றம் மிகவும் மெதுவாக உள்ளது.

(3) நெற்பயிரைக் காட்டிலும் மரவள்ளிக்கிழங்குப் பயிருக்கு அதிக வருவாய் கிடைப்பதால் அதனையே பயிரிட அப்பகுதி உழவர்கள் விரும்புகின்றனர்.

போதிய அளவு நீர் வழங்கப்படாதது குறித்துப் புகார்கள் தொடர்ந்து வந்ததன் காரணமாக அரசு கட்டளையிட்டதன் பேரில் (பாசனத்) தலைமைப்பொறியாளர் 5—10—1972-ல் அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டு அதுபற்றி அறிக்கை ஒன்றை அரசுக்கு அனுப்பினர். இந்த அறிக்கையின் அடிப்படையில் கருங்கல் பங்கீட்டுக் கால்வாய்த் திட்டத்தின்கீழ் பாசனம் பெறும் ஆயக்கட்டுப்பகுதியில் பயிர்த்தேவைகளை இயன்ற அளவு துல்லியமாக மதிப்பிட்டு அப்பகுதிக்கான தகுந்த பயிர் முறை குறித்துக் கருத்துத் தெரிவிக்க அப்பகுதியின் மண் வளம் பற்றி வேளாண்மைத் துறை ஆய்வு செய்தது. மண்வள ஆய்வு குறித்த அறிக்கை (பாசனத்) தலைமைப்பொறியாளரின் பரிசிலனையில் உள்ளது. மண்வள ஆய்வு குறித்த அறிக்கையையொட்டி (பாசனத்) தலைமைப்பொறியாளர் செய்யவிருக்கும் பரிவுரையின் அடிப்படையில் மேற்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்பொழுது அங்கு மணற்பாங்காக இருப்பதால் தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது என்று கூறினுர்கள். மணற் பாங்கான இடத்தில் தென்னைதான் அதிகமாகப் பயிர் செய்யப் படுகிறது. அங்கு நெல் பயிர் செய்யப்படுவதில்லை. இன்னும் இங்கே மரவள்ளிக்கிழங்கு பயிரிடப்படுவது தண்ணீர் தட்டிற்குக் காரணம் என்று சொன்னுர்கள். தண்ணீர் கிடைக்காததால்தான் திரும்பவும் மரவள்ளிக்கிழங்கு பயிரிடப்படுகிறது. அங்கே தொடர்ந்து தண்ணீர் விடாத நிலைமை இருக்கிறது. விளவங்கோடு தாலுக்கா நெல் விளைச்சல் குறைந்த இடம். எனவே, அங்கே தொடர்ந்து தண்ணீர் விடாத நிலைமையை மாற்றுவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டென்னிஸ் அவர்கள் ஏற்கனவே அதைப்பற்றி இந்த அரசுக்குப் புகார் தெரிவித்ததன் பேரில் தலைமைப் பொறி யாளரை அனுப்பி அங்கே பார்த்து அரசுக்கு அறிக்கை அனுப்பும் படி சொன்னேம். அவர் பார்த்த பிறகு இந்த விவரங்களைத் தந் திருக்கிருர். எவ்வளவு நீரை அனுப்பினுலும் அது கடைசி கடை மடைக்குப் போகவில்லை என்ற கருத்து வந்திருக்கிறது. அந்த மண்ணுக்கு ஏற்ற பயிரைப்பற்றி வேளாண்மைத் துறையினர் ஆய்வு செய்து தலைமைப் பொறியாளருக்கு அனுப்பியிருக்கிருர்கள். தலைமைப் பொறியாளரிடமிருந்து அறிக்கை இன்னும் கிடைக்க வில்லை. அந்த அறிக்கை கிடைத்த பிறகுதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) சென்னை நகரில் ரேஷன் கார்டுகள் வைத்திருப்பவர்களுக்கு ரவை, மைதா போன்ற உணவு தானியங்கள் கிடைக்காமை குறித்து

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவ னத்திற்குக் கொண்டு வருகிறேன்: